2005 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியிலே மீனவர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உப்புத் தண்ணீர் கிடைப்பதாகச் சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் போர்க்கால அடிப்படையிலே அந்த நிகழ்வுகளானது நிகழ்ந்து இரண்டாவது நாள் முதற்கொண்டே நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரானது அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 259, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

259—

மழைநீர்க் கால்வாய்

***37511—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, கொளத்தூர் காமராஜர் நகர் ஓடை பகுதியில் மழைநீர்க் கால்வாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 260, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

260—

விளையாட்டு வீரர்கள்

***27143—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 30

(அ) தமிழகத்திலுள்ள தேசிய அளவில் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களை அரசின் பொறுப்பில் தத்து எடுத்து சர்வதேச அளவில் அவர்களின் திறமையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1991 ஆம் ஆண்டு தேசிய அளவில் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களை அரசின் பொறுப்பில் தத்தெடுத்து, சர்வதேச அளவில் அவர்கள் திறமையை உயர்த்தும் விதமாக சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம், மீண்டும் 2001–ல் புதுப்பிக்கப்பட்டு, தேசிய அளவில் தங்கப் பதக்கம் பெற்ற வீரர்களை அரசே தத்தெடுத்து, அவரது குடும்பத்தாருடன் கலந்து அவர்களது தேவைகள் அனைத்தையும் வழங்கி வருகிறது. அரசு தத்தெடுக்கும் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான, விளையாட்டு உபகரணங்கள், போட்டிகளுக்காக வெளிநாடு செல்ல விமானப் பயணக் கட்டணம், சிறப்புப் பயிற்சிபெற ஆகும் செலவுகள், வீரர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகள், இவர்களுக்கு சிறப்பு உடற்தகுதி குறித்த தேர்வுகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் நடத்துவது, வீரர்கள் மனோதத்துவ ரீதியில் மனவலிமைப்பெற பயிற்சிகள் மற்றும் நவீன விளையாட்டு அரங்கங்களில் இலவசமாகப் பயிற்சி பெறுதல் ஆகியவை, ஒவ்வொரு வீரரின் தேவைக்கு ஏற்ப, 20,000 முதல் 2,00,000 ரூபாய் வரை செலவு செய்து வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. மேலும், இத்திட்டத்தின்கீழ் 57 விளையாட்டு வீரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இவர்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 8 வீரர்களுக்கு அவர்களின் அடிப்படை வசதிகளையும், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு செய்துவருகிறது. (ஆ) நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]